# Gospel Truth

# காஸ்பெல் ட்ரூத்

**உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்**

ISSUE - 45 International Editor : MICHAEL W. SMITH இதழ் - 45


## நீங்கள் முதலாவது தேடுங்கள்

அனுதினமும் பலவிதமான சந்தர்ப்ப தேர்வுகளையும், முடிவுகளையும் கொண்டதே நம் வாழ்க்கை. நான் எங்கே செல்ல வேண்டும்? நான் என்ன சொல்ல வேண்டும்? நான் எப்படி நடக்க வேண்டும்? என்னுடைய நேரத்தை எப்படி செலவிடுகிறேன். என்னுடைய ஆற்றலையும், என் சம்பாத்தியத்தையும் எப்படி செலவிடுகிறேன். ஒவ்வொரு மனுஷருடைய இருதயமும் அவர்கள் எடுக்கிற முடிவுகளை பிரதிபலிக்கிறது. உலகத்தின் ஜனங்கள் மகிழ்ச்சி, பணம், புகழ் இவைகளையே நாடுகிறார்கள். இயேசுகிறிஸ்து, அவர்தம் மலைப்பிரசங்கத்திலே முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள் என்கிறார் (மத் 6:33) .

தேவனுக்கேற்ற காரியங்களுக்கு முதன்மையான இடத்தை கொடுக்க வேண்டியது கிறிஸ்தவர் களாகிய நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாயிருக்கிறது. கிறிஸ்துவின் நாமத்தினாலே, அவருடைய பெயரைக் கொண்டே, உலகப்பொருட்களுக்கும், உலக இன்பங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள்; அநேகர் கிறிஸ்துவையும், அவருடைய நீதியையும் நம்மில் மற்றவர்கள் காணும்படியாய் கிறிஸ்தவர்களின் கிரியை இருக்க வேண்டும்.

எல்லோருடைய வாழ்விலும் நாம் சந்திக்க வேண்டிய காரியங்கள் உண்டு. உணவு, உடை, குடும்பத்தோடு செலவிடப்படவேண்டிய நேரம். தூக்கம், உழைப்பு, வேலை இவைகள் தான். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள் என்று கூறுமுன், இயேசு என்னத்தை உண்போம்? அல்லது என்னத்தை குடிப்போம் என்றோ, என்னத்தை உடுப்போம் என்றும் கவலைப்படாதீர்கள்.அஞ்ஞானிகள் இவைகளை நாடித் தேடுகிறார்கள் இவைகளெல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் (மத் 6:31-32) .

தேவன் இவைகளை நாம் புறக்கணிக்க வேண்டும் என்று சொல்லிப் போதிக்காமல், இவைகளுக்காக கவலைப்பட வேண்டாம். உங்கள் பிதா அவைகளை அறிந்திருக்கிறபடியால், உங்கள் தேவைகளை அவர் சந்திப்பார். உலகப்பொருட்கள், ஆசை, இச்சைகள் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுக்கு முதலிடம் கொடுப்பதினால் இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும் (மத் 6:33). தேவனுடைய ஊழியக்காரனாய், அவரைத் தொழுதுகொள்ளுகிற ஒவ்வொருவரும் அவர்தம் மகிழ்ச்சியையும், வெற்றியையும் கர்த்தரைச் சார்ந்த காரியங்களுக்கு முதலிடம் கொடுப்பதன் மூலம் அடையலாம். உங்களுக்கென்று, கனவுகள், திட்டங்கள், முயற்சிகள், நோக்கங்கள் எல்லாம் இருக்கலாம். ஆனாலும் கர்த்தருக்கு முதலிடம் கொடுக்க தவறக்கூடாது. நித்திய வாழ்வுக்கான ஆத்தும ஆதாயத்தைவிட முக்கியமானது வேறொன்றுமில்லை.

நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவுகளிலும், நான் கர்த்தருக்கு முதலிடம் கொடுக்கிறேனா? என்று கேள்வி கேட்க வேண்டும் லூக் 14:16-20. உவமையில் இயேசுகிறிஸ்து போல ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தாங்கள் சுயமாய் எடுக்கும் அநேக முடிவுகளுக்கு விளக்கம் கொடுத்துவிட்டு பிறகு மன்னிக்கும்படி வேண்டிக் கொள்கிறார்கள். ஒருவன் வயலைப் பார்க்கவும் மற்றவன் ஏர்மாடுகளை சோதித்துப்பார்க்கவும். ஒருவன் பெண்ணை விவாகம் பண்ணினேன் எனவும் காரணம் கூற தொடங்குகிறார்கள். இதில் கர்த்தருக்கு எங்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது? உங்களுடைய தெரிந்துகொள்ளுதலும் இதையே காட்டுகிறதா? பாவமில்லாத சில பிரமாண காரியங்கள் நம் நேரத்தையும், கவனத்தையும் எடுத்துக்கொள்கின்றது.




**ஒவ்வொரு மனுஷருடைய இருதயமும் அவர்கள் எடுக்கிற முடிவுகளை பிரதிபலிக்கிறது. அதன் முக்கியத்துவத்தை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள்**


| | | | | |
|---|---|---|---|---|
| முதலாவது தேடுங்கள் | தலையங்கம் | வேதபாடம் புதிய விசுவாசிகளுக்கு ஆலோசனைகள் | துணை கட்டுரை புதிய விசுவாசிகளுக்கு ஆலோசனைகள் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை தொடங்கினவர் முடிய நடத்திவருவார் |
| 1 | 3 | 4 | 5-7 | 8 |

# வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?




**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;
மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,
1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,
எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ;
தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;
1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;
வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;
1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;
1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;
உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;
2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ;
2 கொரி 3 : 17

**சுவிசேஷ அறிவித்தல்**
மாற் 16 : 15

ஆனாலும் கிறிஸ்தவர்கள் எல்லாவற்றைக் காட்டிலும் கர்த்தருக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும். நாம் ஜாக்கிரதையாய் செயல்படாவிட்டால் ஆவிக்குரிய கனிகளை இழந்துபோக நேரிடும். உங்கள் இருதயம் பெருந்திண்டியினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும் நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள் பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர் மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும் (லூக் 21:34-35).
நாம் கர்த்தரை தேடுவதற்கு முதலிடம் கொடுக்கிறோமா அல்லது உலக கவலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா? முதலாவது தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவரையே நம் வாழ்வின் வழிகாட்டியாக கொண்டு எங்கே வாழ வேண்டும், யாரை திருமணம் செய்ய வேண்டும், என்ன வேலை செய்ய வேண்டும் என்று கர்த்தரிடம் கேட்க வேண்டும்.

**கிறிஸ்தவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேட வேண்டும். அப்போதுதான் சிறப்பான தங்கள் நேரம், பணம், திறமைகள் எல்லாம் கர்த்தருக்கே கொடுக்க முடியும்**

உலகம் இரண்டாவதுதான். அநேகர் உலகமேன்மைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றனர். பணம் இந்த உலகத்தில் வாழ தேவைதான். ஆனால் நம்முடைய முக்கியத்துவமானது முதலாவது கர்த்தருக்கே! பிறகுதான் மற்றவைகளுக்கு.

கிறிஸ்தவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேட வேண்டும். அப்போதுதான் சிறப்பான தங்கள் நேரம், பணம், திறமைகள் எல்லாம் கர்த்தருக்கே கொடுக்க முடியும். அனுதினமும் வேதத்தை வாசித்து, தியானித்து, ஜெபிக்க நேரம் தேவை. நாம் அதை விட்டுவிட்டால், வேறு ஏதோ ஒன்று முக்கியத்துவம் பெறுகிறதல்லவா. தேவனுடைய பரிசுத்தவான்களின் ஐக்கியத்தில் பங்குகொள்ள நாம் நேரம் செலவிடுகிறோமா? தேவனுடைய காரியங்களுக்கு பணம் தேவைப்படும்போது நம் தேவை, சேமிப்பு, எதிர்கால தேவையெல்லாம் தியாகம் செய்துவிட்டு செலவிடுகிறோமா?

உலகப்பிரகாரமான ஜனங்களுடைய வாழ்விற்கும், நமக்கும் பெரிய வித்தியாசம் உண்டு. பவுல், ரோமாபுரி சபையினருக்கு கூறுகையில், நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

இந்த தலைமுறை கிறிஸ்தவர்கள், ஒரு விசை தங்கள் மனதைப் புதிதாக்கி, தேவ ராஜ்ஜியத்தை தேடுவார்களானால் நடைமுறை வாழ்க்கை சிறப்பாகும்.■



என்ன உங்களுக்கு முக்கியம்
என்று ஒருவரைக் கேட்காதீர்கள்.
அவன் தன் நேரத்தை
எப்படி செலவிடுகிறான்
என்று கவனியுங்கள்
– டேல் கார்நெகி

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* www.thegospeltruth.org *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*

**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227, சர்ச் தெரு,
கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

Editorial

எபேசியர் 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச்செய்தார்.
இயேசு கிறிஸ்துவால் நம் வாழ்க்கை மறுரூபமாக்கப்படுவதைக் காண்பது எவ்வளவு மகிமை. சரீரமாகிய கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய பிள்ளைகளாக நாம் பிறப்பது ஆச்சரியம். மறுரூபமாக்கப்பட்ட அனுபவத்திற்குள்ளாக கடந்து செல்லும் தேவபிள்ளைகள் ஒவ்வொருவரும் ஆராதனையிலும், ஐக்கியத்திலும் புதுப்பெலன் அடைவர். ஆவிக்குரிய அநேக புது குழந்தைகள் கிறிஸ்துவின் சபையில் புதிதாக இணைக்கப்பட வேண்டும். தேவசபையில் புதிதாய் வரும் ஆவிக்குரிய ஒவ்வொரு ஆத்துமாக்களையும் சபையின் தூண்களாக எண்ணுகிறோம்.
புதிதாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களின் வாழ்க்கை பலநேரங்களில் பலவீனப்படும். சூழ்நிலையில், ஆவிக்குரிய குழந்தைகளின் இறப்பு விகிதமானது. அதிகமாகிக் கொண்டே போகிறது. ஆவிக்குரிய ஊட்டச்சத்துகளையும் விழிப்புணர்வையும் கொடுத்து, உற்சாகமூட்டி குழந்தைகளை வளர்ப்பதில் கிறிஸ்து நம்மேல் கரிசனையுள்ளவராய் இருக்கிறார். புதிதான ஆவிக்குரிய பிள்ளைகள் தேவையில்லாமல் விழுந்து போவதையும், வளர்ச்சியின்றி நின்று போவதையும் காண முடிகிறது. புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் வாழ்க்கையைக் குறித்து பயப்பட தேவையில்லை. தேவதிட்டத்தையும் தேவனை அறிகிற அறிவிலும் வளரும் ஒவ்வொருவருக்கும் மிகவும் செழிப்பான, ஜெயமுள்ள வாழ்வை தேவன் தர வல்லமையுள்ளவர்.
இந்த மாத இதழில், புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களின் ஆவிக்குரிய வாழ்வில் வளர வழிகளை போதிக்கும்படியாக இருக்கிறேன். புது ஆத்துமாக்களின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டிருந்தாலும், ஆவிக்குரிய முதிர்ந்த கிறிஸ்தவர்களின் அனுதின வாழ்க்கைக்கும் மிகவும் பிரயோஜனமாக இந்த இதழ் இருக்கும் என்று விசுவாசிக்கிறேன். நம்முடைய ஜெயமுள்ள வாழ்க்கையை காண தேவன் வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார். ஆகவே நாம் பின்மாற்றம் அடையாமல், கவனமுடன் இருப்போம். தேவனுடைய திட்டங்களை அவர் நம்மைக்கொண்டு நிறைவேற்றும்படியாக நாம் விசுவாசத்தோடே, தைரியமாய் முன்னேறிச் செல்வோம். தேவனோடு நமக்கு உள்ள ஐக்கியத்தை பெலப்படுத்தி அவருக்கு முதலிடம் தருவோம்.
புதிதாய் இரட்சிக்கப்பட்டோர், ஆவிக்குரிய நிறைவைப் பெற, சிறிது சிறிதாக, அடிமேல் அடியெடுத்து வைத்து நடக்கும் நடைபயிற்சி போல இரட்சிப்பின் அனுபவத்தில் வளர்ச்சி பெற வேண்டும். தேவ சித்தத்தை நம் வாழ்க்கையில் நிறைவேற்ற நாம் பிரயாசப்படும்போது, அனுதினமும் நம்மை அவர் உயர்த்தி நடத்துவார். பூட்டப்பட்ட ஒரு கதவுக்கு எப்படி சாவிதான் ஒரு சரியான வழியாக இருக்க முடியுமோ அது போல தான் தேவனைத் தேடுகிற ஒவ்வொருவருக்கும் பரலோகத்தின் திறவுகோல்கள் உண்டு.
ஆவியிலே உற்சாகமடையுங்கள். ஆவியின் கனிகளை கொடுப்பீர்கள் (உபா 31:6). நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள். அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார். அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை என்று சொன்னான்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதித்து கிருபையாய் காக்கக் கடவர்.

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

**மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுங்கள் (அப் 2:38)**

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும், இயேசுகிறிஸ்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றதைப்போல, கீழ்ப்படிந்து முதலாவது ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இரட்சிப்பின் சாட்சியும், கிறிஸ்துவுக்குள் உயிர்ப்பிக்கப்பட்ட ஆவிக்குரிய அனுபவத்தையும் ஞானஸ்நானம் நமக்குப் பெற்றுத் தருகிறது. ஆகவேதான் புதிதாக இரட்சிக்கப்பட்டோர் முதலாவது ஞானஸ்நானம் பெற அறிவுறுத்தப்படுகிறார்கள். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும், தாமதமின்றி ஞானஸ்நானம் பெறும்படியாக உங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

*காஸ்பெல் ட்ரூத் இதழ் 10: ஞானஸ்நானம்*



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : புதிய விசுவாசிகளுக்கு அறிவுரைகள்

**வேத வாசிப்பு :** ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்,அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக - கொலோ 2:6-7.

**செய்திச் சுருக்கம் :** ஆவிக்குரிய ஜெயமுள்ள வாழ்வின் திறவுகோல்களை அறிந்துகொண்டு வாழ பிரயாசப்படுங்கள். கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ ஒப்புக்கொடுப்போம்.

---

### I.மேலானவைகளை நாடுங்கள்.

A.கொலோ 3:1,2 மேலானவைகளை நாடுங்கள

B.2கொரி 7:10-11 ஜாக்கிரதை, ஆவல், கண்டிப்பு

### II. விசுவாத்தில் நடப்போம்

A.2 கொரி 5:7 தரிசித்து நடக்காமல், விசுவாசித்து நடக்கிறோம்.

B.எபேசி 2:8-9 இரட்சிப்பு என்பது கிருபை

C.ரோமர் 8:1 கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள்

### III. கிறிஸ்துவோடு ஐக்கியப்படுங்கள்

A.யோவா 15:4-5 கிறிஸ்துவில் தரித்திருங்கள்

B.மாற் 12:30 முழு இருதயத்தோடும் கர்த்தரில் அன்புகூறுங்கள்

### IV. அனுதினமும் தேவனோடு நடவுங்கள

A.யோவான் 14:15 என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்.

B. எபி 12:14 பரிசுத்தமுள்ளவர்களாயிருங்கள்

C. 1கொரி 10:31 தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.

### V. கிருபையின் ஆசீர்வாதம்

A. 2 பேதுரு 3:18 கிருபையில் வளருங்கள்

B. எபி 4:16 உறுதியாய் பற்றிக்கொண்டிருங்கள்.

C. 2கொரி 12:9 என் கிருபை உனக்குப்போதும்

### VI. சோதனையை சகித்துக்கொள்ளுங்கள்

A. மத் 26:41 சோதனைக்குட்படாதேயுங்கள்

B. ரோமர் 13:14 மாம்சத்திற்கேற்ப நடவாதிருங்கள்

### VII.குற்றமற்ற மனசாட்சி

A. லூக் 19: 8-9 திரும்ப செலுத்துகிறேன்.

B. அப் 24:16 குற்றமற்ற மனசாட்சி உடையவராயிருங்கள்

### VIII.வேதத்தை வாசியுங்கள்

A. 1 பேது 2:2 திருவசன வாஞ்சை

B. 2 தீமோ 2:15 சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்க

C. 2 தீமோ 3:14-17 கற்று, நிச்சயித்து, நிலைத்திரு

D.சங் 119: 105 உம்முடைய வசனம் என்பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது.

### IX. ஜெபம்

A. 1தெச 5:17 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்

B. பிலி 4:6 உங்கள் விண்ணப்பங்களைத் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்

C. 1 பேது 5:7 கவலைகளை அவர்மேல் வைத்துவிடுங்கள்

### X.விசுவாசிகளோடு ஐக்கியப்படுங்கள்

A. எபி 10:25 சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்

B. கொலோ 3:16 ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்

### XI.சாட்சியை பகிருங்கள்

A. வெளி 12:11 சாட்சியின் வசனத்தினால் ஜெயித்தார்கள்.

B. ரோமர் 1:16 கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்.

C. மாற் 16:15 சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்

### XII.கர்த்தருக்காக நற்கிரியைகளைச் செய்யுங்கள்.

A. எபெ 2:10 நற்கிரியைகளைச் செய்யுங்கள்.

B. மத் 6:19-20 பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்.

C.1கொரி 14:12 ஆவிக்குரிய வரங்களை நாடுங்கள்.

D.யாக் 2:14-17 கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததே.

### XIIIசரியான முக்கியத்துவம்; கொடுத்தல்.

A. மத் 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுங்கள்.

B. ரோமர் 12:2 பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கலாகாது.

**முடிவு :**

சகோதரரே, அதைப்பிடித்துக்கொண்டேனென்று
நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன்.
பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி,
கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த
பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை
நோக்கித் தொடருகிறேன்.
பிலிப் 3:13-14

# கிறிஸ்துவை புதிதாக ஏற்றுக் கொண்டவர்களுக்கான ஆலோசனைகள்

புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு, உலகத்தை விட்டு மனந்திரும்பி புதிய வாழ்வுக்குள் சீக்கிரமாக அர்ப்பணித்து விடுவார்கள். ஆகவே எதிரியான பிசாசானவன் அநேக கேள்விகள், சந்தேகங்கள் மற்றும் பயத்தை கொண்டுவருவான். ஆகவே தேவனுக்கேற்ப வாழ நினைக்கும் இளம் தலைமுறையினருக்கான சத்தியத்தின் திறவுகோல்களையே நாம்; இங்கே தியானிக்கப் போகிறோம்.



**கர்த்தருடைய வேதம் கூறுகிறது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்கும்.**

### நீங்கள் தனிமையானவர்கள் அல்ல:

புதிய கிறிஸ்தவ வாழ்க்கை அனுபவத்திற்கான வேதாகம சத்தியங்கள். நடைமுறை பழக்கங்கள் மற்றும் வழி காட்டுதல்களே ஒருவருக்கு அவசியம். கிறிஸ்துவுக்குள்ளான வாழ்வில், வளரவும் நிலைத்திருக்கவும் இரட்சிப்பு முதலாவது நமக்கு தேவை. தேவனோடு ஐக்கியப்படவும் வளரவும் அவர் நம்மை ஒருபோதும் தனியேவிட மாட்டார். தேவனுடைய உதவி இல்லாமல் நாம் பரிசுத்தமாய் வாழவே முடியாது. ஞானத்தின் திறவுகோல்களை தெரிந்துகொண்டால்தான் உங்கள் எதிர்காலம் பிரகாசமாயிருக்கும். (கொலோ 2:6-7) (6) ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு. (7) நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

### உங்கள் நோக்கத்தில் உறுதியாய் இருங்கள் :

பாவத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்டவர்களின் இருதயமானது தேவனுக்கு நேராகத் திரும்ப வேண்டும். கடந்த கால பாவ வாழ்க்கை, உலக இச்சைகளால் இழுப்புண்டு மீண்டும் பழைய வாழ்வுக்குத் திரும்பும்படி இருதயத்தைத் திருப்பிவிடக்கூடாது. மேலானவைகளை நாடுங்கள் என்று வேதசத்தியம் நமக்கு தெளிவுபடுத்துகிறது. பூமிக்குரியவைகளை அல்ல (கொலோ 3:1-2) இரட்சிப்பு தேவனிடத்திலிருந்து வருகிறது. நான் உலகத்தின்பால் பின்னிட்டுத் திரும்ப மாட்டேன் என்று உறுதியோடு நில்லுங்கள். கொரிந்து சபையினருக்கு பவுல் அறிவுறுத்துகையில், (2கொரி 7:11) பாருங்கள். நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்ததுண்டே: அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும் எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று. இந்தக்காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணினீர்கள். எதிர்மறை எண்ணங்களும், பின்மாற்றங்களும் வந்து தடுமாறாமல் தடுக்க வழி ஏற்படும்.

### விசுவாசத்தில் தரித்திருங்கள்.

சூரியன் உதிக்கும், அந்த நாள் முடிவில் மறையும். இரட்சிப்பு என்பது அப்படியல்ல. (2கொரி 5:7) இந்தத் தேகத்தில் குடியிருக்கையில், கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நல்ல உணர்வுகள் மதிக்கப்படத்தக்கதே. இரட்சிப்பு என்பது அப்படிப்பட்ட ஒரு உணர்வு அல்ல. உணர்வுகள் வரும் போகும். ஆனால் தேவனுடைய ஈவு வரமோ நிச்சயம் (எபே 2:8) .கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.

உனக்காய் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தின் மேன்மையில் நம்பிக்கை வையுங்கள் (ரோமர் 8:1). ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவராயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. சாத்தான் உங்களைச் சோதிக்கையில், உங்களை நீங்களே ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளுங்கள். நான் பாவத்திற்கு திரும்ப வேண்டுமா? தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டுமா? பாவத்தை விட்டு நீங்கி தேவனை சேவிக்க விரும்பினால், தேவன்அருளிய ஈவுகளில் மகிழ்ந்து, சாத்தானை புறம்பே தள்ளுங்கள்.

### கிறிஸ்துக்குள் வளருங்கள் :

கிறிஸ்தவ வாழ்வு என்பது ஒழுங்குமுறைகளால் சூழப்பட்டது மாத்திரமல்ல. மாறாக தேவனிடத்தில் ஐக்கியப்படுங்கள். கிறிஸ்தவர்கள், அநேக தரம் கிறிஸ்துவைப் போல வாழ முயற்சிக்கிறார்கள். ஆயினும் அது நிறைவேறுவதில்லை. ஆனால் முயற்சித்துக் கொண்டே இருந்தால் இன்னும் தேவனிடம் நெருங்கி சேரலாம். யோவான் 15:4-5 என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனி கொடுக்க மாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள். நாம் தேவனிடத்தில் நெருங்கிச் சேரும்போது, நாமும் அவரைப் போல மாற முடியும். உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரை தேடும் போது அவரோடு ஐக்கியப்படும்போது வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடியும்.




**நாம் இயேசுவோடு ஐக்கியப்படும்போது நாமும் அவரைப் போல் ஆவோம். நாம் கிறிஸ்துவோடு ஒருமனப்பட்டி ருப்பதனால் கனி கொடுக்கும் வாழ்வை வாழ முடியும்.**

### தேவனோடு அனுதினமும் நடவுங்கள்

தேவனை நேசிக்கிற தேவ பிள்ளைகளாகிய நாம், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய அழைக்கப்பட்டிருக்கிறோம். (யோவான் 14:15). நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனை களைக் கைக்கொள்ளுங்கள். பரம பிதாவுக்கேற்ற பரிசுத்தத்தில் பங்கடைவோம். கேள்விகள் நமக்குள்ளே எழும்போது அப்போஸ்தலராகிய பவுலின் அறிவுரைகளை பின்பற்றுங்கள். (1கொரி 10:31) ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் . நம்முடைய கிரியைகள் தேவனுடைய நாமத்துக்கு மகிமையை கொண்டுவராவிட்டால், நாம் தவறுகிறோம் என்று அர்த்தம்.

### கிருபை என்னும் திறவுகோலை உபயோகியுங்கள்

சோதனை, பாடுகள், உபத்திரவங்களின் வழியாக நாம் பிரவேசிக்கும்போது, தேவனுடைய ஆச்சரியமான கிருபை நமக்கு உதவுகிறது. பேதுரு கூறுகையில் அவருடைய கிருபையிலே வளருங்கள். (2பேது 3:18) என்கிறார். கர்த்தருடைய தயவு அவசியம். ஏனெனில் பாடுகள்; நம்மை தேவனிடமிருந்து பிரித்துவிடாதபடிக்கு காத்துக்கொள்ள வேண்டும் (எபி 4:16). ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (2கொரி 12:9). அதற்கு அவர்: என் கிருபை உனக்குப் போதும்: பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என் மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். விசுவாசிப்பீர்களானால், நம்முடைய பெலவீனங்களிலே, அவருடைய பெலன் பூரணமாய் விளங்கும்.

### சோதனையை சகித்துக்கொள்ளுங்கள் :

இந்த பூமியிலே வாழ்கிற வரை, நமக்கு உபத்திரவம் உண்டு. பாவத்தின் வல்லமையையும், உலகத்தின் இச்சைகளும் இழுப்புண்டு நாம் மீண்டும் திரும்பிவிடாமல் இருக்க இரட்சிப்பின் அனுபவம் மாத்திரம் போதாது. உபத்திரவங்களை கண்டு துவண்டு போய்விடக்கூடாது. இயேசு தம் சீஷர்களிடம் மத் 26:41ல் நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ பலவீனமுள்ளது என்றார். ரோமர் 13:14 ல் துர்இச்சைகளுக்கு உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். உபத்திரவத்திற்கு வழிவகுக்கும் ஜனங்களை விட்டு சற்று விலகியே இருங்கள். கவனமாய் வாழ முயற்சியுங்கள். சோதனையை ஜெயிக்க கர்த்தருடைய கிருபை உங்களுக்கு உதவும் நீங்கள்; விழிப்புணர்வற்று, பாவத்தை வாஞ்சித்தால் தேவகிருபை உங்களுக்கு உதவாது.

### தேவனோடு ஒப்புரவாகி, நிலைத்திருங்கள்

லூக் 19:8-9 ல் சகேயு செய்ததுபோல, நம்முடைய தவறை முதலாவது சரிசெய்யவும், நம்மால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அதை ஈடுசெய்யவும் ஒப்புக்கொடுப்போம். பவுலைப்போல நாம் வாழ பழகுவோம். அப்போ 24:16.இதனால் நான் தேவனுக்கும் மனுஷனுக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன். ஆவியின் கனியின் பரிபூரணத்தை இழந்து போகாதிருங்கள். உங்கள்; இருதயத்தை தாழ்த்தி, ஒப்புக்கொடுங்கள். சாட்சியுள்ள வாழ்வுக்கு சான்று பகருவோம்.

### வேதத்தை வாசியுங்கள்

அனுதினமும் வேதத்தை வாசித்து ஆவிக்குரிய வளர்ச்சி பெறுவதே அடிப்படையானது. (1பேது 2:2). சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும் சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, தேவன் கற்பித்த வேத வார்த்தையை தியானிக்காமல் எப்படி தேவனை அறிந்து கொள்ள முடியும் (2 தீமோ 3:16-17). வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, (17)அவைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. வேத வியாக்கியானங்கள் அதிகமாய் காணப்பட்டாலும், தெளிவான தியானம் அவசியம். சங்கீதக்காரன் தாவீது சங் 119 : 105ல் சொன்னது போல, கர்த்தருடைய வேதம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது.

### கர்த்தருடன் பேசுங்கள் :

ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கும், வெற்றிக்கும் ஜெபம் எனும் திறவுகோல் மிகவும் இன்றியமையாதது. எப்போதெல்லாம் நாம் ஜெபிக்க வேணடும்?. இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்(1தெச 5:17) . பரலோக தகப்பனிடம் ஜெபிக்க நேரம் ஒதுங்குங்கள். உலகத்திற்குள்ளாக கடந்து போகுமுன் ஒவ்வொரு நாளும் அதிகாலையில், முதலாவது ஜெபிக்கப்பழகுங்கள்.பின்பு அந்த நாளின் முடிவில், இரவு நித்திரைக்கு செல்லுமுன் ஜெபியுங்கள். இடைப்பட்ட நேரங்களில் மனதில் எப்போதும் ஸ்தோத்திரத்தோடே வேலையை செய்யுங்கள். கர்த்தர் நம் சிநேகிதர், பாரத்தை சுமப்பவர், தேற்றுபவர், உதவுபவர் மற்றும் வழிகாட்டி. உங்கள் இருதயத்தை திறந்து தேவனோடு ஐக்கியப்படுங்கள். ஜெபத்தில் நம்மை அவர் உற்சாகப்படுத்துவார் (பிலி. 4:6). நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல் எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.

கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்வு தொய்வுற்று, பெலவீனப்பட்டு விட்டதென்றால், அங்கே ஜெபம் ஏறெடுக்கப்படவில்லை என்றே அர்த்தம்.

### விசுவாசிகளோடு ஐக்கியப்படுங்கள்

ஆவிக்குரிய தனிமைப்படுத்தல் அநேக தேவபிள்ளைகளை சோர்ந்து போய் உட்கார செய்துவிடும்.ஆகவே தான் மற்ற பரிசுத்தவான்களோடு எப்போதும் ஐக்கியம் அவசியம்.புதிதாக இரட்சிக்கப்பட்டோர் சத்தியம் சரியாகப் போதிக்கப்பட்டு ஆவியில் பெலன் கொள்ளும்படியான சபைகளுக்கு செல்ல வேண்டும்.உலகத்தின் கவலைகளை மேற்கொள்ளும் பொருட்டு நீங்கள் என்ன பணி செய்தாலும் எவ்வளவு பணம் சம்பாதித்தாலும் வாரத்திற்கு ஒருமுறை சபை கூடி வரும் பரிசுத்தவான்களின் ஐக்கியம் தேவை. எபி 10 : 25 ல் சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும் என்று வாசிக்கிறோம்.உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்தும் பரிசுத்தவான்களின் கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள்.

### சாட்சியை மற்றவர்களுக்குப் பகிருங்கள்

உங்கள் இரட்சிப்பின் அனுபவ சாட்சியை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதும் ஆவிக்குரிய ஜெயத்தின் ஒரு திறவுகோல் தான். பழைய பரிசுத்தவான்கள்; தங்கள் சாட்சியின் வசனத்தினால் எதிரியான பிசாசை ஜெயித்தார்கள் (வெளி 12:11). நம் அனுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்லும்போது, உலகத்திற்கு வெளிப்படும் சாட்சியாக மட்டுமல்ல. நம் விசுவாசம் பலப்படவும் எதிரியான பிசாசானவனின் குற்றச்சாட்டுகளினின்று விடுபடவும் நம் சாட்சி உதவுகிறது (ரோமர் 1:16). கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது (மாற்கு 16:15). பின்பு அவர் அவர்களை நோக்கி, நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்

### தேவனுக்காக நற்கிரியை செய்யுங்கள்

இயேசுவின் வருகை வரை பொறுத்திருந்து, வெறுமனே உட்கார்ந்து கொண்டிருக்கும் படியாக தேவன் நம்மை இரட்சிக்கவில்லை. தேவராஜ்யத்தின் சுவிசேஷப்பணியே நம் ஒவ்வொருவரின் தலையாய கடமை. கர்த்தருக்காக உழைக்காமல், ஜனங்கள் சோம்பேறியாகி விடுவதால்தான் ஏனோ சிலசமயங்களில் பின்மாற்றமடைய நேர்கிறது (எபே 2:10) .



ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். உலக ஜனங்கள் அவர்களுக்காக பொக்கிஷத்தை சேர்க்கப் பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கையில், நம் பரமராஜன் இயேசுவுக்காக, பரலோகத்திலே நம் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க நாம் பிரயாசப்படுவோம்.பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்.

இங்கே திருடரும், கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குத் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடரும், கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத் 6:19-20). நம் எண்ணமும், நேரமும் கர்த்தருக்காய் செலவிடப்படும்போதுதான் ஆவியில் பெலமடைய முடியும். 1கொரி 14:12 நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகத்தக்கதாக அவைகளில் தேறும்படி நாடுங்கள். தேவராஜ்யபணி செய்யாத கிறிஸ்தவர்கள் பெலவீனமானவர்கள்.

ஒரு பாடல் கூறுகிறது, இரட்சிக்க தீவிரப்படுங்கள், அதைக் காத்துக்கொள்ள இன்னும் வல்லமைப்படுங்கள். இரட்சிப்பின் ஆரம்பம் ஆச்சரியமே, ஆனால் கடைசிவரை அதை காத்துக்கொண்டு, விசுவாசமாயிருப்பதே மிகச்சிறந்தது. உங்கள் இருதயத்தை ஞானத்திற்கு சாய்த்து, மேற்கூறிய திறவுகோல்களை உபயோகப்படுத்துங்கள். கிறிஸ்து இயேசுவில் வளர்ந்து, பெருகி வெற்றியுள்ள வாழ்க்கை வாழுங்கள். ■

**தேவபிள்ளைகளே ஆவிக்குரிய தனிமைப் படுத்துதல் நமக்கு தேவை. பரிசுத்தவான்களோடு ஐக்கியப்பட்டிக்க வேண்டும்.சத்தியம் சரியாகப் போதிக்கப்படும் இடங்களில் நம் பங்கு அவசியம்**

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?


பலிபீடத்தில் வைக்கப்பட்ட ஆத்துமா கொஞ்சங்கூட எந்த விதத்திலும் உற்சாகமடைய வாய்ப்பில்லை. ஏனெனில், 100க்கு 95 பேர் சபைக்குள் இன்று இருப்பதில்லை. உண்மையில் இருமுறை ஆலயம் வருகிறவர்களை பார்க்க முடிவதில்லை. – சார்லஸ் E.ஹேக்கட்

இரட்சிப்பு என்பது தற்காலிகமான முடிவு எடுக்கப்பட்ட விஷயம் அல்ல. அது மறுரூபமாக்கப்பட்ட வாழ்வின் அடையாளம். அனுதினமும் இயேசுவை பின்பற்றும் அனுபவம்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## தொடங்கினவர் முடிய நடத்திவருவார்

உங்களில் நற்கிரியைகளைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி – பிலி 1:5



மனந்திரும்பிய, ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும். உடைந்த உள்ளத்தை சீர்படுத்தி, அநீதியை சரிசெய்து, ஒரு பாவியை புதுசிருஷ்டியாக்குகின்றார். புதுவாழ்வில் பிரவேசிப்பதில் இருக்கும் சமாதானமும், மகிழ்ச்சியும் மிகவும் ஆச்சரியமானது. ஆரம்ப கால அனுபவம் என்பது தொடக்கம்தான். வாழும் வாழ்விற்கு புது ஜீவனை தரும் அனுபவம் அது.

அப்போஸ்தலராகிய பவுல் கூறியதைப் போல, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி தேவனை ஸ்தோத்திரிக்கிறேன் என்கிறார்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை முற்றிலுமாய் நமக்கென்று தந்துவிட்டார். எல்லாவற்றையும் நமக்காக செய்து முடித்துவிட்டார். நம்முடைய பெலவீனங்கள், போராட்டங்கள், துயரங்கள் எல்லாவற்றையும் தேவன் அறிந்திருக்கிறார். நம் தேவைகளை எல்லா சூழ்நிலைகளிலும் சந்திக்க வல்லவராயிருக்கிறார். நாம் செய்யவேண்டியது எல்லாம், விசுவாசத்தோடு இயேசுவை பின்பற்றி, அவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமாவோம்.

இரட்சிப்பு என்பது பூரணமான தேவதிட்டம். அவருடைய கிரியைகள் எதிர்பாராது நிகழ்கின்ற ஒன்றல்ல. அவர் கைவிடவும் விலகவும் மாட்டார். பரிசுத்த ஆவியானவரால் நீங்கள் தேற்றப்படுவீர்கள். ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்வுக்கான மனுக்குலத்தின் தேவைகளை அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய பிரச்சினைகள் எல்லாம் கர்த்தருக்கு பெரியதே அல்ல. நீங்கள் அவரை பற்றிக் கொண்டால், அவரும் உங்களை விடவே மாட்டார். உங்கள் வாழ்க்கையில் அவர் தொடங்கியதை அவர் நிச்சயமாய் செய்து முடிப்பார்.■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316